மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.04/2020
அ.வ.எண்.136/2020

1. சி.நல்லம்மாள்
2. சி.பெரியண்ணன் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. முருகன்
2. செல்வம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 15.10.2020 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும் இருந்து வந்த இவ்வழக்கில் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாவா ஏ அட்டவணை சொத்தில் எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ, ஏஜெண்டுகளோ அத்துமீறி நுழைந்து மனுதாரர்களின் அமைதியான சுவாதீனத்திற்கு இடைஞ்சல் கொடுக்கக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) தாவா ஏ அட்டவணை சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தாகும். குப்பண்ணகவுண்டர் மற்றும் ராமசாமிகவுண்டர் ஆகியோர் வழக்கு சொத்துகளை கூட்டாக கிரயம் பெற்று அனுபவித்து வந்தனர். கடந்த 17.09.1996 ல் குப்பண்ணகவுண்டரும், ராமசாமிகவுண்டரும் பாகம் பிரித்துக் கொண்டதில் பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏ அட்டவணை சொத்தான 9.01 ஏக்கர் குப்பண்ணகவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது. ராமசாமிகவுண்டருக்கு பாகப்பிரிவினை

பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பி அட்டவணை சொத்தான 7.37 புஞ்சை ஏக்கர் நிலமும், வீடும் ஒதுக்கப்பட்டது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் பி அட்டவணை சொத்தில் பாதை உள்ளது. அது ச.எண்.279/2லும், ஏ அட்டவணை சொத்தின் கிழபுறத்தில் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பாதை இருதரப்பினருக்கும் பொதுவானதாகும். பி அட்டவணை சொத்திலுள்ள பாதையானது கிரயம் பெறுவதற்கு முன்பிலிருந்தே நினைவுக்கு எட்டாத காலம் முதல் இருந்துவருகிறது.

(ii) குப்பண்ணகவுண்டர் 1ம்மனுதாரரின் மாமனாரும், 2ம்எதிர்மனுதாரரின் தாத்தாவும் ஆவார். 1ம்மனுதாரர் 2ம்மனுதாரரின் தாயார் ஆவார். குப்பண்ணகவுண்டருக்கு சின்னண்ணகவுண்டர், செங்கோடகவுண்டர், நல்லப்பன் ஆகிய 3 மகன்கள் இருந்தனர். மேற்படி சின்னண்ணகவுண்டர் 1ம்மனுதாரரின் கணவர், 2ம்மனுதாரரின் தகப்பனார் ஆவார். மேற்படி 3 மகன்கள் 05.03.1971ல் பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை செய்துகொண்டனர். அதில் ஏ அட்டவணை சொத்தான ச.எண்.279/1ல் பு.ஏ.3.40 தற்போதைய ச.எண்.279/1பி சின்னண்ணகவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது. மேற்படி பாகபிரிவினை தேதி முதல் சின்னண்ணகவுண்டர் ஏ அட்டவணை சொத்தை அடைந்து அனுபவித்து வருகிறார். சின்னண்ணகவுண்டரும், அவருடைய சகோதரர்களும், அவர்களுடைய நிலங்களிலுள்ள வீடுகளுக்கு செல்வதற்கு பி அட்டவணை சொத்திலுள்ள வண்டிப்பாதையை தேவையின்பால் அமைந்த வசதியுரிமையின்கீழ் அனுபவித்து வருகின்றனர். பி அட்டவணை வண்டிப்பாதையை தவிர வேறு பாதையில்லை.

(iii) சின்னண்ணகவுண்டர் 22.08.1974ல் மனுதாரர்களையும், தங்கம்மாள், கண்ணம்மாள் ஆகிய மகள்களையும் வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார். மனுதாரர்களும், மேற்படி மகள்களும் வழக்கு சொத்துகளை எவ்வித இடையூறுமின்றி அனுபவித்து வருகின்றனர். சின்னண்ணகவுண்டரின் இரண்டு மகள்களுக்கு சீர்வரிசை செய்து, 35 ஆண்டுகளுக்கு முன்பே திருமணம் செய்து கொடுத்துவிட்டதால் அவர்கள் தங்களுடைய பங்கை மனுதாரர்களுக்கு விடுதலை செய்து கொடுத்துவிட்டனர். ஆகவே வழக்கு ஏ அட்டவணை சொத்தில் மனுதாரர்கள் வருவாய்துறை ஆவணங்களை மாற்றம் செய்து அனுபவித்து வருகின்றனர்.

(iv) வழக்கு சொத்திற்கு கிழக்குபுறம் எதிர்மனுதாரர்களின் நிலங்கள் உள்ளது. எதிர்மனுதாரர்களுக்கு மேற்படி வண்டிப்பாதையை பயன்படுத்த எவ்வித உரிமையும் இல்லை. இந்நிலையில் 25 ஆண்டுகளுக்கு முன்பு எதிர்மனுதாரர்களின் பெற்றோர்கள் வண்டிப்பாதையை பயன்படுத்த அனுமதி கோரினர். மனுதாரர்களும் பயன்படுத்த அனுமதித்தனர். அதன்படிக்கு எதிர்மனுதாரர்களும் 25 வருடங்களாக மேற்படி வண்டிப்பாதையை பயன்படுத்தி வருகின்றனர்.

(v) பி அட்டவணை வண்டிப்பாதையானது கருப்புரெட்டியூரிலிருந்து வீரக்கல் ரோடு செல்லும் ரோட்டிலிருந்து தென்வடலாக செல்கிறது. ஆரம்பத்தில் 30 அடி அகல பாதையாக இருந்தது. 15 ஆண்டுகளுக்கு முன்பு ஒருசில இடங்களில் 20 அடியாகவும், ஒருசில இடங்களில் 20 அடிக்கும் குறைவாகவும் இருந்தது. மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களும் ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் 30 அடி பாதையாக விரிவாக்கம் செய்யப்பட்டது. மேற்படி வண்டிப்பாதை விரிவாக்கத்திற்காக மனுதாரர்கள் தங்களுடைய இடத்தில் 10 அடி அகல இடத்தை விட்டுள்ளனர்.

(vi) ஜனவரி 2020 ல் 1 ம்எதிர்மனுதாரர் வழக்கு ஏ அட்டவணை சொத்தை விற்பனை செய்யுமாறு கோரினார். அதனை மனுதாரர்கள் மறுத்துவிட்டனர். ஆகவே மனுசொத்தை அனுபவிப்பதை எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்துவருகின்றனர்.

(vii) 1 ம்எதிர்மனுதாரர் தன்னுடைய வீட்டிற்கு வடபுறமுள்ள இடத்தை விலைக்கு வாங்கி வண்டிப்பாதையை ஏற்படுத்திக்கொண்டார். ஆகவே பி அட்டவணை சொத்தில் உள்ள வண்டிப்பாதையை பயன்படுத்த எவ்வித தேவையுமில்லை. இந்நிலையில் கடந்த 22.06.2020 ல் எதிர்மனுதாரர்கள் டிராக்டர் மூலம் வண்டிப்பாதையை சேதப்படுத்தியும், வண்டிப்பாதையிலுள்ள மண் மற்றும் கற்களை அகற்ற முயற்சி செய்தனர். ஆகவே 22.06.2020 ல் காவல்துறையில் புகார் அளித்தனர். காவல்துறையினர் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் பெற்றுக் கொள்ள கூறிவிட்டனர். எனவே இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 1ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம்எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம்:

(குறிப்பாணையின் பேரில் எதிர்வழக்குரை எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)

(i) வழக்கு ஏ அட்டவணை சொத்து வாதிகளின் மூதாதையர் சொத்தாக இருக்கலாம். 17.09.1966ல் கருப்பண்ணகவுண்டரும், ராமசாமிகவுண்டரும் பாகப்பிரிவினை செய்து கொண்டது உண்மையாக இருக்கலாம். ஆனால் அதில் பி அட்டவணை வண்டிப்பாதை குறித்து கூறப்பட்டுள்ளதாக கூறுவது பொய்யாகும். மேலும் கருப்பண்ணகவுண்டர் மற்றும் ராமசாமிகவுண்டர் ஆகியோர் கிரயம் பெறுவதற்கு முன்பே பி அட்டவணை வண்டிப்பாதை நினைவுக்கு எட்டாத காலம் முதல் இருந்துவருவதாக கூறுவது பொய்யாகும்.

(ii) 05.03.1971ல் கருப்பண்ணகவுண்டரின் வாரிசுகள் பாகப்பிரிவினை செய்து கொண்டது உண்மையாக இருக்கலாம். அதில் வாதியின் தகப்பனார் சின்னண்ணகவுண்டருக்கு ஏ அட்டவணை சொத்தை ஒதுக்கியதாக கூறியிருப்பது உண்மையாக இருக்கலாம். மேற்படி சின்னண்ணகவுண்டர் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை அனுபவித்து வந்து 22.08.1974ல் இறந்துவிட்டார் என கூறுவதும் உண்மையாக இருக்கலாம். ஆனால் ஏ அட்டவணை சொத்தை அனைத்து வசதியுரிமைகளுடன் அனுபவித்து வந்தார் என கூறுவது பொய்யாகும். மேற்படி சின்னண்ணகவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு மனுதாரர்கள் உள்ளிட்ட தங்கம்மாள் மற்றும் கண்ணம்மாளுக்கு ஏ அட்டவணை சொத்தில் உரிமையுள்ளது. தங்கம்மாள் மற்றும் கண்ணம்மாள் ஏ அட்டவணை சொத்திலுள்ள தங்களுடைய பாக உரிமையை விடுதலை செய்து கொடுத்துவிட்டனர் என கூறுவது பொய்யாகும். மனுதாரர்கள் மட்டுமே மனு ஏ அட்டவணை சொத்தில் சுவாதீனத்தில் உரிமையாளர்களாக இருந்து அனுபவித்து வருகின்றனர் என கூறுவது பொய்யாகும்.

(iii) மனுதாரர்களுக்கு பி அட்டவணை சொத்தை அனுபவிப்பதற்கு தேவையின்பால் வசதியுரிமை ஏற்பட்டுள்ளது என கூறுவது பொய்யாகும். பி அட்டவணை வண்டிப்பாதையை தவிர வேறு பாதை இல்லை என மனுதாரர்கள் கூறுவது பொய்யாகும். மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்திலிருந்தே வேறு

பாதை உள்ளது என்பது தெளிவாக நிரூபணம் செய்யும். 25 ஆண்டுகளுக்கு முன்பு எதிர்மனுதாரர்களின் பெற்றோர்கள் வண்டிப்பாதையை அனுபவிக்க அனுமதி கோரினர் என்பதும், அதனை பயன்படுத்த மனுதாரர்கள் அனுமதி கொடுத்தனர் என்பதும் பொய்யாகும். பி அட்டவணை வண்டிப்பாதை மூலமே எதிர்மனுதாரர்கள் தங்களுடைய ச.எண்.278 க்கிற்கு சென்று கொண்டிருந்தனர் என கூறுவது பொய்யாகும்.

(iv) பி அட்டவணை சொத்தானது கருப்புரெட்டியூரிலிருந்து வீரக்கல் செல்லும் ரோட்டிலிருந்து சென்று வெங்கடாசலம் நிலம் வரை செல்கிறது என கூறுவது பொய்யாகும். நீதிமன்ற ஆணையாளர் தன்னுடைய அறிக்கையில் கருமலைக்கூடலிலிருந்து வீரக்கல் ரோடு வரை செல்லும் ரோடு உள்ளது எனவும், கருப்புரெட்டியூரிலிருந்து வீரக்கல் ரோடு வரை செல்லும் ரோடு இல்லை எனவும், அந்த ரோடு ஆத்தூர் பைப்லைனில் முடிவடைகிறது எனவும் கூறியுள்ளார். ஆகவே மாதிரி வரைபடத்தில் பாதை ஆரம்பித்ததாக குறிப்பிட்டுள்ள இடமும், முடிவடைவதாக குறிப்பிடப்பட்டுள்ள இடமும் தவறானதாகும்.

(v) மனுதாரர்களின் வழக்கின்படிக்கு 17.08.1966 ம் தேதியிட்ட பத்திரத்தில் 6 முழமுடைய பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது. 6 முழம் என்பது 9 அடியாகும். ஆகவே 1966 ல் 30 அடி அகலமுள்ள பி அட்டவணை பாதை இல்லை என்பது தெளிவாக தெரிய வருகிறது. எதிர்மனுதாரர்களுக்கு ச.எண்.278 மற்றும் 279 ல் நிலங்கள் உள்ளதாக வருவாய்துறை ஆவணங்களில் குறிப்பிடாத நிலையில் எதிர்மனுதாரர்கள் எவ்வாறு தங்களுடைய சொத்தை பி அட்டவணை சொத்தின் விரிவாக்கத்திற்காக எவ்வாறு கொடுக்க முடியும். ஆகவே மனுதாரர்கள் கூற்று பொய் என்பது தெரிய வருகிறது. மனுதாரர்கள் மேற்படி வண்டிப்பாதை விரிவாக்கத்திற்காக 10 அடி நிலத்தை கொடுத்தார்கள் என்பது பொய்யாகும். மனுதாரர்கள் உண்மையிலேயே அவ்வாறு ஒதுக்கியிருந்தால் 05.03.1972 பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டிருப்பார்கள். மேற்படி பத்திரத்திலிருந்தே மனுதாரர்கள் எந்தவொரு நிலத்தையும் பி அட்டவணை சொத்திற்காக ஒதுக்கவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் தற்போது எந்தவொரு வண்டிப்பாதையும் இல்லை. ஆகவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

(vi) எதிர்மனுதாரர்கள் பி அட்டவணை வண்டிப்பாதையை சேதப்படுத்த முயற்சி செய்தார்கள் என கூறுவது பொய்யாகும். எதிர்மனுதாரர்களுக்கு வேறு பாதையுள்ளது எனவும், ஆகவே பி அட்டவணை சொத்தை மூடிவிடுவதாக கூறினார்கள் என கூறுவதும் பொய்யாகும். மனுதாரர்கள் துூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை.

(vii) மனுதாரர்கள் 17.08.1966 ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தின்படிக்கு 6 முழம் அதாவது 9 அடி என குறிப்பிட்டுள்ளநிலையில் 30 அடி என தற்போது அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதற்கு எதிராக இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். மேலும் 05.03.1972 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் பி அட்டவணை சொத்து குறித்து குறிப்பிடவில்லை. 05.03.1972 ல் பாகப்பிரிவினை செய்யும்போது மேற்படி 9 அடியையும் தங்களுடைய நிலத்துடன் சேர்த்து சின்னண்ணகவுண்டரின் வாரிசுகள் பாகப்பிரிவினை செய்துகொண்டுள்ளனர். ஆகவே மனுதாரர்களுக்கு தேவையின்பால் வசதியுரிமை ஏற்படவில்லை.

(viii) ச.எண்.279 க்கு கிழபுறம் தற்போது உட்பிரிவு செய்யப்பட்டு, 279/1 ஓடை புறம்போக்கு உள்ளது. மழைக்காலத்தில் அந்த ஓடையில் தான் மழைநீர் செல்லும். ஓடை புறம்போக்கையும் மனுதாரர்கள் பி அட்டவணை சொத்து என குறிப்பிட்டுள்ளனர். மேற்படி ஓடையை மறைத்து மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளனர். மேற்படி ஓடைக்கு கிழபுறம் ச.எண்.278/1 ஏ–ல் சின்னத்தாயி மற்றும் கண்மணி ஆகியோரின் நிலங்கள் உள்ளது. அவர்கள் தான் உண்மையான உரிமையாளர்கள். அவர்களை சேர்க்காததால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. கருமலைக்கூடலிலிருந்து வீரக்கல் செல்லும் ரோட்டிற்கு வடபுறம் மனு ஏ அட்டவணை சொத்து ரோடு பகுதியில் அமைந்துள்ளது. ஆகவே மனுதாரர்கள் அதன் வழியாகவே சென்றுவிடலாம். அதுகுறித்து மாதிரி வரைபடம் மூலமே தெரிந்து கொள்ளலாம். மேற்படி ரோட்டிலிருந்து பி அட்டவணை சொத்து 5 அடி கீழே உள்ளது. ஆகவே மனுதாரர்கள் மேற்படி பி அட்டவணை வண்டிப்பாதையை அனுபவித்து வருவதாக கூறமுடியாது. நீதிமன்ற ஆணையாளர் எதிர்தரப்பினர் இல்லாமல் நியமிக்கப்பட்டுள்ளார். ஆகவே அவருடைய அறிக்கை மனுதாரர்களுக்கு எவ்விதத்திலும் உதவாது. பி அட்டவணை சொத்தின்

உண்மையான நீள அகலம் குறிப்பிடப்படவில்லை. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கோரியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i)(a) மனுதாரர்கள் தரப்பில் தாவா ஏ அட்டவணை சொத்தினை குப்பண்ணகவுண்டர் மற்றும் ராமசாமிகவுண்டர் ஆகியோர் கூட்டாக கிரயம் பெற்று அனுபவித்து வந்தனர் எனவும், கடந்த 17.09.1996 ல் ம.சா.ஆ.9 ன் மூலம் குப்பண்ணகவுண்டரும், ராமசாமிகவுண்டரும் பாகம் பிரித்துக் கொண்டதில் பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏ அட்டவணை சொத்து குப்பண்ணகவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது எனவும், ராமசாமிகவுண்டருக்கு பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது எனவும், ம.சா.ஆ.9 ல் பி அட்டவணை சொத்தான ச.எண்.279/2 லும், ஏ அட்டவணை சொத்தின் கிழபுறத்தில் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், அந்த பாதை இருதரப்பினருக்கும் பொதுவானது எனவும், பி அட்டவணை சொத்திலுள்ள பாதையானது கிரயம் பெறுவதற்கு முன்பிலிருந்தே நினைவுக்கு எட்டாத காலம் முதல் இருந்துவருகிறது எனவும் வழக்காடியுள்ளனர்.

(i)(b) குப்பண்ணகவுண்டருக்கு சின்னண்ணகவுண்டர், செங்கோடகவுண்டர், நல்லப்பன் ஆகிய 3 மகன்கள் எனவும், அதில் சின்னண்ணகவுண்டர் 1ம்மனுதாரரின் கணவர் எனவும், 2ம்மனுதாரரின் தகப்பனார் எனவும், மேற்படி 3 மகன்கள் 05.03.1971 ல்

ம.சா.ஆ.1ன் மூலம் பாகபிரிவினை செய்துகொண்டனர் எனவும், அதில் ஏ அட்டவணை சொத்தான ச.எண்.279/1ல் பு.ஏ.3.40 தற்போதைய ச.எண்.279/1பி சின்னண்ணகவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது எனவும், பாகபிரிவினை தேதி முதல் சின்னண்ணகவுண்டர் ஏ அட்டவணை சொத்தை அடைந்து அனுபவித்து வருகிறார் எனவும், சின்னண்ணகவுண்டரும், அவருடைய சகோதரர்களும், அவர்களுடைய நிலங்களிலுள்ள வீடுகளுக்கு செல்வதற்கு பி அட்டவணை சொத்திலுள்ள வண்டிப்பாதையை தேவையின்பால் அமைந்த வசதியுரிமையின்கீழ் அனுபவித்து வருகின்றனர் எனவும் வழக்காடியுள்ளனர்.

(i)(c) மேலும் சின்னண்ணகவுண்டர் 22.08.1974ல் மனுதாரர்களையும், தங்கம்மாள், கண்ணம்மாள் ஆகிய மகள்களையும் வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் எனவும், இறப்புச்சான்றிதழ் ம.சா.ஆ.10 எனவும், வாரிசுச்சான்றிதழ் ம.சா.ஆ.11 எனவும், மனுதாரர்களும், மேற்படி மகள்களும் வழக்கு சொத்துகளை எவ்வித இடையூறுமின்றி அனுபவித்து வருகின்றனர் எனவும், சின்னண்ணகவுண்டரின் இரண்டு மகள்களுக்கு சீர்வரிசை செய்து, 35 ஆண்டுகளுக்கு முன்பே திருமணம் செய்து கொடுத்துவிட்டதால் அவர்கள் தங்களுடைய பங்கை மனுதாரர்களுக்கு விடுதலை செய்து கொடுத்துவிட்டனர் எனவும், ஆகவே வழக்கு ஏ அட்டவணை சொத்தில் மனுதாரர்கள் வருவாய்துறை ஆவணங்களை மாற்றம் செய்து அனுபவித்து வருகின்றனர் எனவும், கணிணிசிட்டா ம.சா.ஆ.2 எனவும், அடங்கல் ம.சா.ஆ.3 எனவும், வரிரசீதுகள் ம.சா.ஆ.5 மற்றும் 6 எனவும் கூறியுள்ளனர்.

(i)(d) ஏ அட்டவணை சொத்திற்கு பி அட்டவணை வண்டிப்பாதை வழியாக தான் செல்லமுடியும் எனவும், அதை தவிர வேறு பாதை இல்லை எனவும், பி அட்டவணை வண்டிப்பாதையானது கருப்புரெட்டியூரிலிருந்து வீரக்கல் ரோடு செல்லும் ரோட்டிலிருந்து தென்வடலாக செல்கிறது எனவும், வழக்கு சொத்திற்கு கிழக்குபுறம் எதிர்மனுதாரர்களின் நிலங்கள் உள்ளது எனவும், எதிர்மனுதாரர்களின் பெற்றோர்கள் வண்டிப்பாதையை பயன்படுத்த அனுமதி கோரினர் எனவும், மனுதாரர்களும் பயன்படுத்த அனுமதித்தனர் எனவும், பி அட்டவணை வண்டிப்பாதை ஆரம்பத்தில்

30 அடி அகல பாதையாக இருந்தது எனவும், 15 ஆண்டுகளுக்கு முன்பு ஒருசில இடங்களில் 20 அடியாகவும், ஒருசில இடங்களில் 20 அடிக்கும் குறைவாகவும் இருந்தது எனவும், அதனுடைய புகைப்படங்கள் ம.சா.ஆ.7 மற்றும் ம.சா.ஆ.12 எனவும், மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களும் ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் 30 அடி பாதையாக விரிவாக்கம் செய்யப்பட்டது எனவும், மேற்படி வண்டிப்பாதை விரிவாக்கத்திற்காக மனுதாரர்கள் தங்களுடைய இடத்தில் 10 அடி அகல இடத்தை விட்டுள்ளனர் எனவும், 1 ம்எதிர்மனுதாரர் வழக்கு ஏ அட்டவணை சொத்தை விற்பனை செய்யுமாறு கோரினார் எனவும், அதனை மனுதாரர்கள் மறுத்துவிட்டனர் எனவும், ஆகவே மனுசொத்தை அனுபவிப்பதை எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்துவருகின்றனர் எனவும், எனவே இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii)(a) எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கு ஏ அட்டவணை சொத்து வாதிகளின் மூதாதையர் சொத்தாக இருக்கலாம் எனவும், ம.சா.ஆ.9 ன் அடிப்படையில் 17.09.1966 ல் கருப்பண்ணகவுண்டரும், ராமசாமிகவுண்டரும் பாகப்பிரிவினை செய்து கொண்டது உண்மையாக இருக்கலாம் எனவும், அதில் பி அட்டவணை வண்டிப்பாதை குறித்து கூறப்பட்டுள்ளதாக கூறுவது பொய் எனவும், கருப்பண்ணகவுண்டர் மற்றும் ராமசாமிகவுண்டர் ஆகியோர் கிரயம் பெறுவதற்கு முன்பே பி அட்டவணை வண்டிப்பாதை நினைவுக்கு எட்டாத காலம் முதல் இருந்துவருவதாக கூறுவது பொய் எனவும் கூறியுள்ளனர்.

(ii)(b) 05.03.1971 ல் ம.சா.ஆ.1 ன் அடிப்படையில் கருப்பண்ணகவுண்டரின் வாரிசுகள் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் வாதியின் தகப்பனார் சின்னண்ணகவுண்டருக்கு ஏ அட்டவணை சொத்தை ஒதுக்கியதாக கூறியிருப்பது உண்மையாக இருக்கலாம் எனவும், மேற்படி சின்னண்ணகவுண்டர் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை அனுபவித்து வந்து 22.08.1974 ல் இறந்துவிட்டார் என கூறுவதும் உண்மையாக இருக்கலாம் எனவும், ஆனால் ஏ அட்டவணை சொத்தை அனைத்து வசதியுரிமைகளுடன் அனுபவித்து வந்தார் என கூறுவது பொய் எனவும், மேற்படி

சின்னண்ணகவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு மனுதாரர்கள் தங்கம்மாள், கண்ணம்மாள் ஆகிய இருமகள்களுக்கும் உரிமையுள்ளது எனவும், ஆனால் அவர்கள் ஏ அட்டவணை சொத்திலுள்ள தங்களுடைய பாக உரிமையை விடுதலை செய்து கொடுத்துவிட்டனர் என கூறுவது பொய் எனவும், மனுதாரர்கள் மட்டுமே மனு ஏ அட்டவணை சொத்தில் சுவாதீனத்தில் உரிமையாளர்களாக இருந்து அனுபவித்து வருகின்றனர் என கூறுவது பொய் எனவும் கூறியுள்ளனர்.

(ii)(c) மனுதாரர்களுக்கு பி அட்டவணை சொத்தை அனுபவிப்பதற்கு தேவையின்பால் வசதியுரிமை ஏற்பட்டுள்ளது என கூறுவது பொய் எனவும், பி அட்டவணை வண்டிப்பாதையை தவிர வேறு பாதை இல்லை என மனுதாரர்கள் கூறுவது பொய் எனவும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்திலிருந்தே வேறு பாதை உள்ளது என்பது தெளிவாக நிரூபணம் செய்கிறது எனவும், 25 ஆண்டுகளுக்கு முன்பு எதிர்மனுதாரர்களின் பெற்றோர்கள் வண்டிப்பாதையை அனுபவிக்க அனுமதி கோரினர் என்பதும், அதனை பயன்படுத்த மனுதாரர்கள் அனுமதி கொடுத்தனர் என்பதும் பொய் எனவும், பி அட்டவணை வண்டிப்பாதை மூலமே எதிர்மனுதாரர்கள் தங்களுடைய ச.எண்.278 க்கிற்கு சென்று கொண்டிருந்தனர் என கூறுவது பொய் எனவும் கூறியுள்ளனர்.

(ii)(d) பி அட்டவணை சொத்தானது கருப்புரெட்டியூரிலிருந்து வீரக்கல் செல்லும் ரோட்டிலிருந்து சென்று வெங்கடாசலம் நிலம் வரை செல்கிறது என கூறுவது பொய் எனவும், நீதிமன்ற ஆணையாளர் தன்னுடைய அறிக்கையில் கருமலைக்கூடலிலிருந்து வீரக்கல் ரோடு வரை செல்லும் ரோடு உள்ளது எனவும், கருப்புரெட்டியூரிலிருந்து வீரக்கல் ரோடு வரை செல்லும் ரோடு இல்லை எனவும், அந்த ரோடு ஆத்தூர் பைப்லைனில் முடிவடைகிறது எனவும், ஆகவே மாதிரி வரைபடத்தில் பாதை ஆரம்பித்ததாக குறிப்பிட்டுள்ள இடமும், முடிவடைவதாக குறிப்பிடப்பட்டுள்ள இடமும் தவறானது எனவும் கூறியுள்ளனர்.

(ii)(e) மனுதாரர்களின் வழக்கின்படிக்கு 17.08.1966 ம் தேதியிட்ட பத்திரத்தில் 6 முழமுடைய பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், 6 முழம் என்பது 9 அடி எனவும்,

ஆகவே 1966ல் 30அடி அகலமுள்ள பி அட்டவணை பாதை இல்லை என்பது தெளிவாக தெரிய வருகிறது எனவும், மனுதாரர்கள் மேற்படி வண்டிப்பாதை விரிவாக்கத்திற்காக 10அடி நிலத்தை கொடுத்தார்கள் என்பது பொய் எனவும், மனுதாரர்கள் உண்மையிலேயே அவ்வாறு ஒதுக்கியிருந்தால் 05.03.1972 பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டிருப்பார்கள் எனவும், மேற்படி பத்திரத்திலிருந்தே மனுதாரர்கள் எந்தவொரு நிலத்தையும் பி அட்டவணை சொத்திற்காக ஒதுக்கவில்லை என்பது தெரியவருகிறது எனவும், தற்போது எந்தவொரு வண்டிப்பாதையும் இல்லை எனவும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

(ii)(f) மேலும் ச.எண்.279க்கு கிழபுறம் தற்போது உட்பிரிவு செய்யப்பட்டு, 279/1 ஓடை புறம்போக்காக உள்ளது எனவும், மழைக்காலத்தில் அந்த ஓடையில் தான் மழைநீர் செல்லும் எனவும், ஓடை புறம்போக்கையும் மனுதாரர்கள் பி அட்டவணை சொத்து என குறிப்பிட்டுள்ளனர் எனவும், மேற்படி ஓடைக்கு கிழபுறம் ச.எண்.278/1ஏ–ல் சின்னத்தாயி மற்றும் கண்மணி ஆகியோரின் நிலங்கள் உள்ளது எனவும், அவர்கள் தான் உண்மையான உரிமையாளர்கள் எனவும், அவர்களை சேர்க்காததால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல எனவும், கருமலைக்கூடலிலிருந்து வீரக்கல் செல்லும் ரோட்டிற்கு வடபுறம் மனு ஏ அட்டவணை சொத்து ரோடு பகுதியில் அமைந்துள்ளது எனவும், ஆகவே மனுதாரர்கள் அதன் வழியாகவே சென்றுவிடலாம் எனவும், அதுகுறித்து மாதிரி வரைபடம் மூலமே தெரிந்து கொள்ளலாம் எனவும், மேற்படி ரோட்டிலிருந்து பி அட்டவணை சொத்து 5அடி கீழே உள்ளது எனவும், மனுதாரர்கள் மேற்படி பி அட்டவணை வண்டிப்பாதையை அனுபவித்து வருவதாக கூறமுடியாது எனவும், பி அட்டவணை சொத்தை தவிர வேறு பாதையில்லை என மனுதாரர்கள் கூறுவது பொய் எனவும், நீதிமன்ற ஆணையாளர் எதிர்தரப்பினர் இல்லாமல் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும், ஆகவே அவருடைய அறிக்கை மனுதாரர்களுக்கு எவ்விதத்திலும் உதவாது எனவும், பி அட்டவணை சொத்தின் உண்மையான நீள அகலம் குறிப்பிடப்படவில்லை எனவும், எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) மனுதாரர்கள் தரப்பில் ச.எண்.279/1 அதன் புதிய ச.எண்.279/1பி விஸ்தீரணம் பு.ஏ.3.40 அதிலுள்ள க.எண்.55 தகரம் வேய்ந்த கூரைவீடு ஒன்றும், மேற்படி நிலத்திற்கு கிழக்காக 30அடி அகலத்தில் வீரக்கல் கருப்புரெட்டியூர் ரோட்டிலிருந்து வடக்காக செல்லும் வண்டிப்பாதையை பயன்படுத்தி செல்லும் உரிமை ஆகியவற்றை மனு ஏ அட்டவணை சொத்தாக காண்பித்து, அதனை மனுதாரர்கள் அனுபவிப்பதை இடையூறு செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். இந்நிலையில் மனுதாரர்கள் ஏ அட்டவணையில் கண்டுள்ள வண்டிப்பாதையை தனியாக பி அட்டவணை சொத்தாக காண்பித்து இ.ம.எண்.02/2020யை தாக்கல் செய்துள்ளனர். ஆகவே ஏ அட்டவணையில் கண்டுள்ள வண்டிப்பாதை கீழே பரிசீலனை செய்யும்போது பி அட்டவணை என குறிப்பிடப்பட்டுள்ளது.

(iv)(a) மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1, ம.சா.ஆ.9 ஆகியவற்றின் அடிப்படையில் பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது எனவும், அதன் அடிப்படையில் மனுதாரர்களின் தகப்பனார் சின்னண்ணனுக்கு மேற்படி சர்வே எண்ணில் கண்ட வீடு மற்றும் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுக்கவில்லை. மேற்படி சின்னண்ணன் கடந்த 22.08.1974ல் இறந்துவிட்டார் என்பது ம.சா.ஆ.10ன் மூலம் தெரியவருகிறது. அவருடைய வாரிசுகள் மனுதாரர்கள் மற்றும் தங்கம்மாள், கண்ணம்மாள் ஆகியோர்கள் என்பது ம.சா.ஆ.11ன் மூலம் தெரியவருகிறது.

(iv)(b) மனுதாரர்கள் தரப்பில் மேற்படி தங்கம்மாள், கண்ணம்மாள் ஆகியோர் தங்களுடைய பாகங்களை மனுதாரர்களுக்கு விடுதலை செய்து கொடுத்துவிட்டார்கள் என கட்சி செய்துள்ள நிலையில் அதனை எதிர்மனுதாரர்கள் மறுத்துள்ளனர். மேற்படி தங்கம்மாள் மற்றும் கண்ணம்மாள் தங்களுடைய பாகங்களை விடுதலை செய்து கொடுத்துள்ளார்களா என்பது குறித்து இருதரப்பிலும் சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தியதற்கு பின்னிட்டு அசல் வழக்கு விசாரணைக்கு பின்னிட்டு தான் தீர்மானிக்க இயலும். இந்நிலையில் மனுதாரர்கள் மனு ஏ அட்டவணை சொத்தில் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பது ம.சா.ஆ.3 முதல் 5 வரையிலான சான்றாவணங்களின் மூலம் தெரியவருகிறது. ஆகவே ச.எண்.279/1 அதன் புதிய

ச.எண்.279/1பி விஸ்தீரணம் பு.ஏ.3.40 அதிலுள்ள க.எண்.55 தகரம் வேய்ந்த கூரைவீடு ஒன்று ஆகியவை குறித்து மனுதாரர்கள் வழக்கில் முதல்நோக்கு வழக்கு உள்ளதும், சட்டசமநிலை வாய்ப்பும் மனுதாரர்களுக்கு உள்ளது தெரியவருகிறது. மேற்படி சொத்தில் எதிர்மனுதாரர்களுக்கு என்ன உரிமை உள்ளது என எதிர்மனுதாரர்கள் கூறாத நிலையில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்படும் பாதிப்பை விட மனுதாரர்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படும் என்பதால் மேற்கண்ட சொத்துகள் குறித்து மனுதாரர்கள் கோரிய இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v)(a) எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏ அட்டவணையில் கண்ட 30அடி அகல வண்டிப்பாதையான பி அட்டவணை சொத்து இல்லை என கட்சி செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை பத்தி 3ல் ம.சா.ஆ.9ல் பி அட்டவணை சொத்து குறித்து குறிப்பிடப்படவில்லை என கட்சி செய்தபோதும், பத்தி 6ல் மேற்படி ம.சா.ஆ.9ல் 6முழம் அதாவது 9அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என கூறியுள்ளார்கள். ஆகவே எதிர்மனுதாரர்கள் தரப்பிலேயே ம.சா.ஆ.9ல் பாதை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதை ஒப்புக் கொண்டுள்ளது தெரியவருகிறது.

(v)(b) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தற்போது பாதை இல்லை என கட்சி செய்தபோதும், நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடத்திலிருந்தே மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களின் சொத்துகளுக்கு இடையே பாதை செல்வது தெரிய வருகிறது. நீதிமன்ற ஆணையாளர் இருதரப்பினர் மற்றும் அவர்களுடைய வழக்கறிஞர்களின் முன்னிலையில் பார்வையிட்டு, மேற்படி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையிலிருந்து அந்த பாதை கருமலைக்கூடலிலிருந்து வீரக்கல் செல்லும் பாதையிலிருந்து வடக்கு நோக்கி செல்வதும், அதனை சிவப்பு வர்ணத்தில் குறிப்பிட்டுள்ளதும் தெரியவருகிறது. ஆகவே தற்போது பாதை இல்லை என எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைத்த கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v)(c) எதிர்மனுதாரர்கள் தரப்பில் வீரக்கல்லிலிருந்து கருப்புரெட்டியூர் செல்லும் ரோட்டிலிருந்து வடபுறத்தில் வழக்கு வண்டிப்பாதை செல்கிறது என குறிப்பிட்டுள்ள போதும் ஆணையாளர் கருமலைக்கூடலிலிருந்து வீரக்கல் செல்லும் தார்சாலை என குறிப்பிட்டுள்ளார் எனவும், வெங்கடாசலம் நிலத்தில் மேற்படி வண்டிப்பாதை முடிகிறது என கூறியுள்ளபோதும், அந்த பாதை ஆத்தூர் கூட்டுகுடிநீர் திட்டத்திற்கு போடப்பட்ட சாலையில் முடிகிறது எனவும், ஆகவே வண்டிப்பாதையின் ஆரம்பம் மற்றும் முடிவு ஆகியவை தவறாக மனுதாரர்கள் கொடுத்துள்ளதாக கட்சி செய்துள்ளனர். மேற்படி ஆணையாளரின் அறிக்கை மற்றும் வரைபடத்தை கவனமாக பரிசீலனை செய்ததில் கருமலைக்கூடலிலிருந்து வீரக்கல் செல்லும் தார்சாலை என குறிப்பிட்டுள்ளார். நீதிமன்ற ஆணையாளர் குறிப்பிட்டுள்ள வீரக்கல் செல்லும் தார்சாலையும், மனுதாரர்கள் வீரக்கல் செல்லும் தார்சாலை என குறிப்பிட்டுள்ள தார்சாலையும் வெவ்வேறானது என எதிர்மனுதாரர்கள் தரப்பில் கட்சி செய்யப்படவில்லை. ஆகவே மேற்படி தார்சாலை கருப்புரெட்டியூரில் ஆரம்பிக்கிறது என இடம் குறித்து தவறாக குறிப்பிட்டிருந்த போதும் எவ்வித பாதிப்பும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. மேலும் நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையிலிருந்து வெங்கடாசலம் நிலத்திற்கு அடுத்த வடபுறம் ஆத்தூர் கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கு போடப்பட்ட மண்சாலை உள்ளது தெரியவருகிறது. ஆகவே வழக்கு வண்டிப்பாதை வெங்கடாசலம் நிலத்திற்கு வடபுறமுள்ள ஆத்தூர் கூட்டுக்குடிநீருக்கு போடப்பட்ட மண்சாலையை சென்றடைவது தெரியவருகிறது. ஆகவே வழக்கு வண்டிப்பாதைஆரம்பிக்கும் இடமும், சேரும் இடமும் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன் வைத்த கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v)(d) எதிர்மனுதாரர்கள் தரப்பில் ச.எண்.279/1 ஓடை எனவும், அதற்கு கிழபுறம் சின்னத்தாயி மற்றும் கண்மணி ஆகியோரின் நிலங்கள் ச.எண்.278/1ஏ–ல் உள்ளது எனவும், அந்த ஓடையின் வழியாக தான் மழைநீர் செல்கிறது எனவும், அதனை மறைத்து பி அட்டவணை வண்டிப்பாதை என மனுதாரர்கள் கூறுகிறார்கள் என கட்சி செய்யப்பட்டுள்ளது. ஆனால் ச.எண்.279/1ல் ஓடை உள்ளது என கூறுவதற்கும், கண்மணி மற்றும் சின்னத்தாயி ஆகியோர்களின் நிலங்கள் ஓடைக்கு கிழபுறம் உள்ளது

என்பதற்கும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சான்றாவணத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் மேற்படி சின்னத்தாயி மற்றும் கண்மணி ஆகியோர் இடையூறு செய்ததாக மனுவில் கூறாதநிலையில் அவர்கள் தேவையான தரப்பினர்கள் இல்லை என முடிவு செய்து எதிர்மனுதாரர்களின் கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v)(e) எதிர்மனுதாரர்கள் தரப்பில் கருமலைக்கூடலிலிருந்து வீரக்கல் செல்லும் தார்சாலைக்கு வடக்கே வழக்கு ஏ அட்டவணை சொத்து உள்ளது எனவும், ஆகவே நேரடியாகவே கருமலைக்கூடலிலிருந்து வீரக்கல் செல்லும் பிரதான தார்சாலையிலிருந்து வழக்கு சொத்திற்கு செல்ல முடியும் என கட்சி செய்துள்ளனர். ஆனால் நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையிலிருந்து பிரதான சாலையிலிருந்து வடக்கு பக்கம் புறம்போக்கு நிலமும், அதற்கு அடுத்த வடக்கு பக்கம் தான் வழக்கு ஏ அட்டவணை சொத்து உள்ளதும் தெரியவருகிறது. அதேபோல் தான் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.11 மாதிரி வரைபடத்திலேயும் குறிப்பிடப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. ஆகவே வழக்கு ஏ அட்டவணை சொத்திலிருந்து நேரடியாக பிரதான சாலைக்கு வர முடியாதது தெரியவருகிறது. ஆகவே வழக்கு ஏ அட்டவணை சொத்திலிருந்து நேரடியாக பிரதான சாலைக்கு வர முடியும் என எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்திய கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v)(f) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனு சொத்துக்கு வேறு பாதை உள்ளது என கட்சி செய்தபோதும், எந்த இடத்தில் வேறு பாதை உள்ளது என்பது குறித்து கூறவில்லை. மேலும் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்திலிருந்தே வேறு பாதை உள்ளது தெரியவரும் என கூறியுள்ளனர். ஆனால் மாதிரி வரைபடமான ம.சா.ஆ.8 ல் வேறு பாதை உள்ளதாக குறிப்பிடப்படவில்லை. ஆகவே வேறு பாதை உள்ளது என எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைத்த கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v)(g) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களின் சொத்தைவிட பி அட்டவணை சொத்து 5 அடி தாழ்வாக உள்ளதால் மனுதாரர்கள் அதனை பயன்படுத்தினார்கள் என கூறுவது பொய் என கட்சி செய்துள்ளனர். ஆனால் நீதிமன்ற ஆணையாளர் தன்னுடைய அறிக்கையில் வழக்கு ஏ அட்டவணை சொத்தை விட பி அட்டவணை சொத்து தாழ்வாக உள்ளதாக கூறவில்லை. எனவே வண்டிப்பாதை எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்திய அனைத்து கட்சிகளும் ஏற்புடையதல்ல என்பதாலும், நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையிலிருந்து பி அட்டவணை பாதை உள்ளதும் தெரியவருவதால் மேற்படி நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையில் உள்ள வண்டிப்பாதையை உள்ளது உள்ளபடியே வைத்து இருதரப்பினரும் அனுபவித்து வர வேண்டியது எனவும், அதனை மனுதாரர்கள் அனுபவிப்பதை எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்யக்கூடாது எனவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vi) இம்மனுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளவைகள் அனைத்தும் இம்மனுவை பொறுத்த முடிவுகள் தான். இவைகள் இந்த வழக்கின் விசாரணைக்கு பொருந்தாது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

முடிவாக தாவா ஏ அட்டவணை சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை தவிர மற்ற சொத்துகளை எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ, ஏஜெண்டுகளோ அத்துமீறி நுழைந்து மனுதாரர்களின் அமைதியான சுவாதீனத்திற்கு இடைஞ்சல் கொடுக்கக்கூடாது என எதிர்மனுதாரர்களை தடையுறுத்தி, மனுதாரர்கள் கோரிய இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது எனவும், நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சிவப்பு வர்ணமிட்ட வண்டிப்பாதையை உள்ளது உள்ளபடியே (Status Quo) இருதரப்பினரும் வழக்கு முடியும் வரை வைத்திருக்க வேண்டுமெனவும், மனுதாரர்கள் அனுபவிப்பதை இடையூறு செய்யக்கூடாது எனவும், அவரவர் செலவுத்தொகைகளை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2020 ஆம்

ஆண்டு அக்டோபர் மாதம் 29 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :— இல்லை</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:—</u>

ம.சா.ஆ.1 05.03.1971 சின்னண்ணகவுண்டர், செங்கோடகவுண்டர் மற்றும் நல்லப்பன் ஆகியோர் எழுதிக் கொண்ட பாகபிரிவினை பத்திரம் — சான்றிட்டநகல்

ம.சா.ஆ.2 23.06.2020 கணிணி பட்டா எண்.1742 — கணிணிநகல்

ம.சா.ஆ.3 23.06.2020 அடங்கல் — சான்றிட்டநகல்

ம.சா.ஆ.4 22.06.2020 FMB வரைபடம் — கணிணிநகல்

ம.சா.ஆ.5 1ம்மனுதாரர் பெயரிலுள்ள கந்தாய ரசீதுகள்(2 எண்ணிக்கை) — அசல்

ம.சா.ஆ.6 சின்னண்ணன் பெயரிலுள்ள சொத்துவரிரசீதுகள்(2 எண்ணிக்கை) — அசல்

ம.சா.ஆ.7 புகைப்படங்கள் (10 எண்ணிக்கை), குறுந்தகடு (1 எண்ணிக்கை) — அசல்

ம.சா.ஆ.8 16.09.2020 மாதிரி வரைபடம் — அசல்

ம.சா.ஆ.9 17.08.1966 செங்கோடகவுண்டர், ராமசாமிகவுண்டர் ஆகியோர் எழுதிக்கொண்ட பாகப்பத்திரம் — சான்றிட்டநகல்

ம.சா.ஆ.10 28.05.2013 சின்னண்ணனின் இறப்புச்சான்றிதழ் — சான்றிட்டநகல்

ம.சா.ஆ.11 26.08.2013 வாரிசுச்சான்றிதழ் — சான்றிட்டநகல்

ம.சா.ஆ.12 புகைப்படங்கள் (10 எண்ணிக்கை), குறுந்தகடு (1 எண்ணிக்கை) — அசல்

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :— </u> இல்லை

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.